## சுருக்கம்

நகர்ப்புற வளர்ச்சி – 20.10.2016 அன்று அல்லது அதற்கு முன்னர் பதிவு செய்யப்பட்ட மனைப்பிரிவில் அமையும் விற்கப்பட்ட மற்றும் விற்கப்படாத அனைத்து மனை மற்றும் மனைப்பிரிவுகளை வரன்முறைப்படுத்த ஏற்கனவே வெளியிடப்பட்ட அரசாணைகளில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விதிகளுக்கு உட்பட்டு எவ்வித மாற்றமும் இல்லாமல் 28.02.2021 வரை கால நீட்டிப்பு செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.


==========================================================

### வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் [ந.வ.4(1)] துறை

அரசாணை (நிலை) எண்.16

நாள்: 25.01.2021.
சார்வரி, தை 12,
திருவள்ளுவர் ஆண்டு 2052

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.78, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 04.05.2017.
2. அரசாணை (நிலை) எண்.172, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 13.10.2017.
3. அரசாணை (நிலை) எண்.55, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 02.05.2018
4. அரசாணை (நிலை) எண்.21, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 05.02.2019.
5. நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் கடித எண்.ந.க.எண்.7671/2020/T, நாள் 13.01.2021.
6. உறுப்பினர் செயலர்(பொ), சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் அவர்களின் கடித எண்.மனைப்பிரிவு/14941/2017, நாள் 13.01.2021.

======

**ஆணை:**

பார்வை 1–இல் படிக்கப்பட்ட அரசாணையில் எந்தவொரு அனுமதியற்ற மனைப்பிரிவு ஏற்படுத்தப்பட்டு அதில் குறைந்தபட்சம் ஒரு மனையாவது விற்கப்பட்டு அதற்கான விற்பனைப்பத்திரம் 20.10.2016 அன்று அல்லது அதற்கு முன்னர் பதிவு செய்யப்பட்டிருப்பின் அந்த மனைப்பிரிவில் அமையும் விற்கப்பட்ட மற்றும் விற்கப்படாத அனைத்து மனை மற்றும் மனைப்பிரிவுகளை வரன்முறைப்படுத்த 03.11.2017 வரை ஆறு மாத காலம் அவகாசம் வழங்கி அரசு ஆணை வெளியிட்டிருக்கிறது.

..2..

2. பார்வை 2 மற்றும் 3–இல் படிக்கப்பட்ட அரசாணைகளில் மனை மற்றும் மனைப்பிரிவிற்கு வரன்முறைப்படுத்த 16.11.2018 வரை அவகாசம் வழங்கி அரசு ஆணை வெளியிட்டிருக்கிறது.

3. பார்வை 4–இல் படிக்கப்பட்ட அரசாணையில் மனை மற்றும் மனைப்பிரிவுகளை வரன்முறைப்படுத்த அரசானது எந்தவொரு அனுமதியற்ற மனைப்பிரிவிலும் குறைந்தபட்சம் ஒரு மனையை வரன்முறை செய்வதற்கான விண்ணப்பம் மேற்காண் கால அவகாசத்திற்குள் இணையதளம் வாயிலாக பதிவு செய்யப்பட்டிருந்தால், அந்த குறிப்பிட்ட மனைப்பிரிவில் அமையும் எஞ்சிய விற்கப்பட்ட மற்றும் விற்கப்படாத மனைகள் அனைத்தையும் எப்பொழுது வேண்டுமானாலும் தனியே விண்ணப்பம் செய்து காலதாமதத்திற்கான உரிய கட்டணம் செலுத்தி வரன்முறை செய்து கொள்ளலாம் என ஆணை வெளியிட்டிருக்கிறது.

4. பார்வை 5–இல் படிக்கப்பட்ட கடிதத்தில் நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்கள் வரன்முறைத்திட்டத்தின் கீழ் விண்ணப்பம் செய்ய தவறிய பல அனுமதியற்ற மனைப்பிரிவு உரிமையாளர்கள் மற்றும் வெவ்வேறு அமைப்புகள் விண்ணப்பம் சமர்ப்பிக்க வழங்கப்பட்ட கால அவகாசத்தை நீட்டித்து விடுபட்டுள்ள தங்கள் மனைகளுக்கும் வரன்முறை ஆணை பெறுவதற்கு மீண்டும் ஒரு வாய்ப்பு வழங்க வேண்டி கோரிக்கைகள் வரப்பெற்றுள்ளன. அரசு முதன்மைச் செயலர், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அவர்களால் CREDAI – தமிழ்நாடு அமைப்பு மற்றும் சில ரியல் எஸ்டேட் சங்கத்தினருடன் காணொளிக் காட்சியில் 25.06.2020 அன்று இப்பொருள் குறித்து கருத்துக்கள் கேட்டறியப்பட்டது. அதில் பங்கேற்றோர் கால அவகாச நீட்டிப்பு செய்யுமாறு வலியுறுத்திக் கூறினர்.

திட்டத்திற்கான கால அவகாசம் முடிவுறுவது பற்றிய விழிப்புணர்வு இல்லாததாலும், கால அவகாசம் நீடிக்கப்படும் எனத் தவறாக கருதியதாலும் பலர் விண்ணப்பிக்கத் தவறிவிட்டனர் என அறியப்பட்டது. அவ்வாறு விண்ணப்பிக்கத் தவறியவர்களுக்கும் மற்றும் வரன்முறைப்படுத்தாமல் விடுபட்ட மனைகளை வரன்முறைப்படுத்துவதற்கு ஒரு வாய்ப்பளிக்கும் விதமாக விண்ணப்பம் சமர்பிக்க மேலும் ஆறு மாத கால அவகாசம் வழங்க ஆணை வழங்கப்படலாம் என தெரிவித்துள்ளார்.

பார்வை 6–இல் படிக்கப்பட்ட கடிதத்தில் உறுப்பினர் செயலர்(பொ), சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் அவர்கள் 20.10.2016 அன்றோ அல்லது அதற்கு முன்போ அனுமதியற்ற மனைப்பிரிவு ஏற்படுத்தப்பட்டு அதில் குறைந்தபட்சம் ஒரு மனையாவது விற்கப்பட்டு அதற்கான விற்பனைப்பத்திரம் 20.10.2016 அன்று அல்லது அதற்கு முன்னர் பதிவு செய்யப்பட்டிருப்பின் அந்த மனைப்பிரிவில் அமையும் விற்கப்பட்ட மற்றும் விற்கப்படாத அனைத்து மனை மற்றும் மனைப்பிரிவிற்கும் வரன்முறைப்படுத்த பொதுமக்கள் மற்றும் மனை உரிமையாளர்களிடமிருந்து கோரிக்கை பெறப்பட்டுள்ளதாகவும் எனவே இணையவழி மூலம் மனை மற்றும் மனைப்பிரிவிற்கு வரன்முறைப்படுத்த மேலும் ஒருமுறை வாய்ப்பு வழங்கலாம் எனத் தெரிவித்துள்ளார்.

5. அரசானது நகர் ஊரமைப்பு இயக்குநர் மற்றும் உறுப்பினர் செயலர்(பொ), சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் அவர்களின் கருத்துருவினை கவனமுடன் பரிசீலனை செய்து அங்கீகாரமற்ற மனை மற்றும் மனைப்பிரிவுகளை விவரம் தெரியாமல் வாங்கியவர்களுக்காகவும் (Innocent Purchaser) மற்றும் ஏற்கனவே வெளியிடப்பட்ட அரசாணைகளின்படி தங்களுடைய மனை மற்றும் மனைப்பிரிவுகளை வரன்முறை செய்யத் தவறியவர்களுக்காகவும் மேலும் ஒரு வாய்ப்பு அளிக்கும் பொருட்டு 20.10.2016 அன்று அல்லது அதற்கு முன்னர் பதிவு செய்யப்பட்டிருப்பின் அந்த மனைப்பிரிவில் அமையும் விற்கப்பட்ட மற்றும் விற்கப்படாத அனைத்து

மனை மற்றும் மனைப்பிரிவுகளை வரன்முறைப்படுத்த பார்வை 1 மற்றும் 2—இல் காணும் அரசாணைகளில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விதிகளுக்கு உட்பட்டு எவ்வித மாற்றமும் இல்லாமல் 28.02.2021 வரை கால நீட்டிப்பு செய்து ஆணை வெளியிடுகிறது. மேலும், இத்திட்டத்தில் இணைய வழி மூலம் மட்டுமே மனை மற்றும் மனைப்பிரிவுகளை வரன்முறைப்படுத்த விண்ணப்பிக்க இயலும்.

6. தமிழ்நாடு அங்கீகரிக்கப்படாத மனைபிரிவுகள் மற்றும் மனைகளை வரன்முறைப்படுத்தும் விதி 2017—இல் இத்திட்டம் தொடர்பான உரிய திருத்தம் பின்னர் வெளியிடப்படும்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**தா. கார்த்திகேயன்,**
**அரசு முதன்மைச் செயலாளர்.**

<u>பெறுநர்</u>

அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் (நிதி), சென்னை—9.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,
ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறை, சென்னை—9.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை—9.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,
வணிகவரி மற்றும் பதிவுத்துறை, சென்னை—9.
அரசு முதன்மைச் செயலாளர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, சென்னை—9.
அரசு முதன்மைச் செயலாளர், வேளாண்மைத் துறை, சென்னை—9.
அரசுச் செயலாளர், சட்டத் துறை, சென்னை—9.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை —2.
உறுப்பினர்—செயலர் (பொ), சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம், சென்னை—8,

<u>நகல்:</u>

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகம், சென்னை — 600 009.
மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் துணைச் செயலாளர்,
சென்னை — 600 009.
அரசு தலைமைச் செயலாளர் அவர்களின் முதன்மைச் தனிச் செயலர், சென்னை—600 009.
அரசு முதன்மைச் செயலாளரின் தனிச் செயலர்,
வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, சென்னை — 600 009.
வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் (அ.ந.மு—1/வரவு செலவு) துறை,
சென்னை — 600 009.
பொதுத் (SC) துறை, சென்னை—600 009.
இருப்புகோப்பு / உதிரி நகல்.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

25/1/21
**பிரிவு அலுவலர்**
25/1/21